


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 14.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விருதுகள்












## இந்திய நிகழ்வுகள்

- சுகாதாரம், வேளாண்மை மற்றும் திறன்சார் போக்குவரத்து ஆகிய துறையில் ஏற்படும் சவால்களை தீர்க்கும் நோக்கில், **NITI ஆயோக்**, **இன்டெல் (Intel)** மற்றும் டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (**TIFR**) ஆகியவை இணைந்து அமைத்துள்ள சர்வதேச செயற்கை நுண்ணறிவு உருமாற்றி மாதிரி மையம் (**Model International Center for Transformative Artificial Intelligence**) பெங்களுரில் அமைய உள்ளது.

- போக்குவரத்து துறையின் நாட்டின் **முதலாது பல்கலைக் கழகமானது** வதோதராவில் **செப்டம்பர் 11ல்** தேசிய இரயில் போக்குவரத்து நிறுவனம் (**NRTI – National Rail and Transportation Institute**) தொடங்கியுள்ளது.

- கடலோர காவற்படையை நவீனப்படுத்தும் நோக்கில், கடந்த **2015ம்** ஆண்டு பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் **L & T கப்பல் கட்டுமான நிறுவனம்** 7 ரோந்து கப்பல்களை வடிவமைத்து கொடுக்கும் ஒப்பந்தத்தை பெற்றது.
    - அதன்படி, **"விஜயா"** என்னும் இரண்டாவது **அதிநவீன ரோந்து கப்பல்** நாட்டிற்கு அர்பணிக்கப்பட்டது.
- குறிப்பு:
    - முதலாவது அதிநவீன ரோந்து கப்பல் "விக்ரம்" ஏப்ரல் மாதம் நாட்டிற்கு அர்பணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## உலக நிகழ்வுகள்

- தற்போது நடைமுறையில் இருக்கும் இரயில்வே பிரிவின் மின் இணைப்பை புனரமைப்பது தொடர்பான **3 திட்டங்களை இந்தியா மற்றும் வங்கதேசம்** ஆகிய நாடுகள் கூட்டாக தொடங்கி உள்ளன.
    - வங்கதேச இரயில்வேயின் **குலரா - ஷாபஸ்பூர்** பிரிவின்

புனரமைப்பு
  - இந்தியாவிலிருந்து வங்கதேசத்திற்கு **500 மெகாவாட் திறன் கூடுதல் மின் இணைப்பு**
  - **அகாரா – அகர்தலா இரயில்வே இணைப்பு**

- **புளோரன்ஸ் புயல்** அமெரிக்காவின் வட பகுதியான கரோலரை **விர்ஜீனியா** போன்ற பகுதியில் ∴புளோரன்ஸ் புயல் தாக்கியுள்ளது.
  - இந்த புயலின் வேகம் மணிக்கு 225 கி.மீ. அளவில் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- தென்கொரியாவில் உள்ள **சாங்வான்** நகரில் நடைபெற்று வரும் 52வது உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன் ஷிப் போட்டியில் **25 மீட்டர் பிஸ்டல்** பிரிவில் இந்திய வீரர் **உதய்வீர் சித்து** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.
  - மேலும் 25 மீட்டர் பிஸ்டல் ஜூனியர் அணிகள் பிரிவில் இந்திய அணி (உதய்வீர் சித்து, விஜய்வீர் சித்து, ராஜ்கன்வார் சிங் சந்து ஆகியோர் அடங்கியது) தங்கப்பதக்கம் வென்று சாதனைப் படைத்துள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **நோவாசார் - எஸ் - செயற்கை கோள்**:
  - இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் மற்றும் அதன் வணிக கிளையுமான ஆண்டிரிக்ஸ் (**Antrix**) நிறுவனமும் இணைந்து இங்கிலாந்து நாட்டிற்கு சொந்தமான **"நோவாசார் - எஸ் (NovaSAR-S)** மற்றும் **எஸ்.எஸ்.டி.எல்.எஸ் 1-4 (SSTL S 1-4)** உள்ளிட்ட செயற்கைகோளை ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி-42 ராக்கெட் (**PSLV – C42**) மூலம் செப்படம்பர் 16 அன்று விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

- குறிப்பு:
    - **NovaSAR-S** → செயற்கைகோள், வெள்ள கண்காணிப்பு, விவசாய பயிர் மதிப்பீடு, காடுகள் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை, கடல் பயன்பாடுகள் உள்ளிட்ட புவி கண்காணிப்புக்காக 430 கிலோ எடை கொண்ட நேவாசார் - எஸ் செயற்கைகோள் செலுத்தப்பட உள்ளது. SSTL – Survey Satelite Technology Ltd.

## விருதுகள்

- **இந்தியா – ரஷ்யா** ஆகிய இருநாடுகளுக்கிடையே அமைதி, நட்பு, இணைந்து செயலாற்றுதல் மற்றும் புரிதல் ஆகியவற்றிற்காக பாடுபட்டவர்களுக்கு **"ரஷியா நாடு"** வழங்கும் உயரிய விருதான "நட்புறவு விருது (**order of friendship**) இந்திய செஸ் விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
- குறிப்பு:
    - தென்னிந்தியாவுக்கான ரஷிய துணைத்தூதர் செர்கெய் கோடோவ் என்பவர் இந்த "நட்புறவு விருதினை" சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

- **பிலிப்பைன்ஸ்** தலைநகர் மணிலா நகரில் நடைபெற்ற 40வது **ஆசியா – பசுபிக் டென்டல் ஃபெடரேஷன் மாநாட்டில்** இந்திய மருத்துவ பேராசிரியர் பாலாஜி என்பவருக்கு பாகிஸ்தான் பல் மருத்துவ சங்கம் மிக உயரிய **மனிதநேய விருது** வழங்கி கௌரவித்துள்ளது.
- குறிப்பு:
    - இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியர் பேராசிரியர் பாலாஜி என்பது குறிப்பிடத்தக்கது.